**தலைப்பு 331 - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 331 -சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு | அமுல்படுத்தப்பட்டிருக்காத அவதானிப்புக்கள் | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 2.3(அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து பேணிச் செல்ல வேண்டியிருந்தமைக்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமை ஆக்கபூர்வமானதாக பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்குமாயின் அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்ட மைக்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2.2(அ) |

| | | |
|---|---|---|
| 2.4 அ (i) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 135 மற்றும் 381 (i) இன் பிரகாரம் பயிற்சி நிலையங்களில் அவற்றினதும் பணிகள் நிதி நிருவாக அதிகாரங்கள் கையளிக்காமல் நியமிக்கப்பட்ட பதவியணியினர்களால் மேற்கொள்ளப்பட்டி ருந்ததுடன் 03 பயிற்சி நிலையங்கள் திறைசேரி அங்கீகாரம் இன்றி வங்கிக் கணக்குகளை பேணிச் சென்றிருந்தது. | 2.3 (அ) (i) |
| 2.5 அ | 2013 ஆகஸ்ட், செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் மானிய உதவி செலுத்துவதற்காக முன்னால் சமுர்த்தி ஆணையாளர் நாயக திணைக்களத்தால் சமுர்த்தி அதிகார சபையிலிருந்து பெறப்பட்ட ரூபா 2,374 மில்லியன் தொகை 8 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2.6 (அ) |
| 2.6 | சமுர்த்தி நலனாளிகளின் கட்டாய சேமிப்பு கணக்குகளில் காணப்படுகின்ற பணம் மற்றும் பல்வேறு நோக்கங்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள திணைக்களத்தில் காணப்படுகின்ற நிதியக் கணக்குகளில் இருந்த அந்த நோக்கங்களுக்கு புறம்பாக ரூபா 53,594.67 மில்லியன் அரசாங்கத்தின் பல்வேறு தேவைகளுக்காக வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்தத் தொகையில் ரூபா 53,594.67 மில்லியன் (வட்டியுடன்) மேலும் அறவிட வேண்டி இருந்தது. | 2.4 (இ) (i) |
| 2.7(ஆ) | ஊழியர் கடன் சுழற்சி கணக்கிற்கு உரிய 2022 திசெம்பர் வங்கி இணக்கக் கூற்றை பரீட்சித்த போது 4 வருடங்கள் முதல் 8 வருடங்கள் வரையான கால வீச்சில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் மாற்றப்படாத ரூபா 2,668,654 பெறுமதியான 84 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2.3 (அ)(ii)(ii) |
| 3.5 | சமுர்த்தி வங்கி மற்றும் வங்கி சங்கங்களில் 2014-2018 காலத்தில் ஏற்பட்ட பெறுமதி ரூபா 115,723,619 ஆன 135 மோசடிகள் தொடர்பாக 2018 மற்றும் 2019 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. 2023 ஏப்ரல் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2014-2018 காலப் பகுதிக்காக 15 மோசடிகளுக்காக ரூபா 63,817,207 தொகையும், 2019 முதல் 2023 பெப்ரவரி வரை 92 மோசடிகளுக்காக ரூபா 172,189,227 தொகையும் இனங்காணப்பட்டிருந்தது. | 3.2 (அ) |

சகல சமுர்த்தி வங்கிகள் மற்றும் சமுர்த்தி சங்கங்களை கணனிமயப்படுத்தும் செயற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாடிக்கையாளர்களின் நடவடிக்கைகளை மிகவும் செயற்திறனாக மேற்கொள்வதற்கும் அவ்வாறே கையினால் (Manual) மேற்கொள்ளும் போது வேண்டுமென்றே மேற்கொள்ளப்படுகின்ற தவறுகள் மற்றும் நிதி மோசடிகளை குறைத்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அறிக்கையிடப்பட்ட நிதி மோசடி மற்றும் ஊழல் தொடர்பாக போதியளவான பொருன்மையான பெறுமதியை கொண்டிருந்தது.

3.6.1(இ) சமுர்த்தி சமூக அடிப்படை வங்கி கொடுக்கல் வாங்கல்களை செயற்திறனாக்குவதற்காக Soft Watch மற்றும் SLTS ஆக இரண்டு மென்பொருள்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. 1026 சமுர்த்தி வங்கிக் கிளைகள் இந்த மென் பொருளைப் பயன்படுத்துவதுடன் பிரதான அலுவலகத்துடன் ஒன்றிணையாத 12 கிளைகளினால் 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மென்பொருளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. முறைமையினை அமுல்படுத்துதல் தொடர்பாக 9 சமுதாய அடிப்படை வங்கிகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. 3.4 (ஆ)

நாளொன்றுக்கு வரையறுத்த பணம் கொடுப்பனவு அளவு மாத்திரம் மேற்கொள்ள முடியுமாக இருந்தமையால் முறைமையில் மெதுவாக இருந்தமை, கடன் அறவிடல் முறைமை கடன் அறவிடும் போது ஒழுங்கு முறையாக இன்மை, கடன் மீதிகள் சரியாக இன்மை, முற்கொடுக்கல் வாங்கல்களை பரீட்சிக்க முடியாதிருந்தமை, கணினி முறைமை அவ்வப்போது செயலிழந்தமை, வங்கியில் நேரலைத் தரவுகளை உள்ளடக்கும் இயலுமை மென்பொருள் நிறுவனத்திற்கு இருந்தமையின் காரணமாக தரவுகளின் மாற்றங்கள் மாற்றப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை மற்றும் கணனி முறைமை மூலம் மானியம் பெறுநர்களின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்படுகின்ற பணத்தில் சுயமாக கடன் அறவிடுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டமையின் காரணமாக 05 சமுதாய அடிப்படை வங்கிகளுக்கு உரிய 173 மானிய நலனாளிகளின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்ட மானிய தொகை ரூபா 3,857,777 கடன் தவணையாக அறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 3.6.2(அ) | 2013 இன் 1 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் 36 ஆவது பிரிவின் கீழ் திவிநெகும அபிவிருத்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட வேண்டியிருந்ததுடன் திணைக்களத்திற்கு கிடைக்கின்ற சகல மானியம் மற்றும் நன்கொடைகள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட வங்கி மற்றும் வங்கி சங்கங்களால் நன்கொடையாக ஏனைய பங்களிப்பு பணம், வங்களில் இலாபத்திலிருந்து அமைச்சர் தீர்மானிக்கின்ற நிதி சதவீதமாக சகல பெறுவனவுகளும் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைத்தல் வேண்டும். அதன் பின்னர் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் திவிநெகும அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டியிருந்த போதும் திவிநெகும அபிவிருத்தி நிதியம் இதுவரை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | 3.4 (அ) |
| 3.6.2(ஆ) | மேற்கூறப்பட்ட சட்டத்தின் 45 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் 6 நிதியங்கள் பேணிச்செல்லப்படுவதுடன் சமுர்த்தி நிதியம் மற்றும் ஊழியர் கடன் சுழற்சி நிதியம் தற்போது செயலிழந்த நிலையில் காணப்பட்டது. | 2.4 (ஆ)(iii) |
| 4(ஈ) | 2019 யூலை 05 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள கடிதத்தின் பிரகாரம் 2013 இன் 1 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் 25(3) ஆம் பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை வங்கி பதவியணியினருக்காக ஓய்வூதியத்துடன் அரச சேவையில் நிரந்தரமாக்கும் அடிப்படையில் நியமித்தல் சட்டத்திற்கு முரணாக இருந்ததாக கௌரவ சட்டமா அதிபரால் அறிவிக்கப்பட்டிருந்தமையும் சமூக அடிப்படை வங்கி சங்கங்களில் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற திவிநெகும சட்டத்தின் 44(உ) மற்றும் ii இன் கீழ் திணைக்களத்தில் சேவைக்கு சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தற்காலிக அடிப்படையில் அந்த நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தமையை கவனத்திற்கொள்ள வேண்டி யிருந்ததுடன் எதிர்காலத்தில் வங்கி பதவியணியினருக்காக வேறொரு பதவி அங்கீகரித்துக் கொள்வதற்கும் அதன் பின்னர் வெற்றிமாகின்ற பதவிகளுக்காக அதன் பிரகாரம் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென காண்பிக்கப்பட்ட போதிலும் இதுவரை அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 7605 வங்கி பதவியணியினருக்காக திணைக்களத்தின் செலவின விடயத்தில் சம்பளம் செலுத்தப்பட்டி ருந்தது. 2022 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்டுள்ள தொகை ரூபா 4,259.25 மில்லியன் ஆகும். | 5 (இ) |

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீண்டெழும் செலவினம்

நிதிக்கூற்றுக்களுக்கான மீண்டெழும் செலவினம் கணக்கீடு செய்யப்பட்டபோது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிச் செயலாற்றல் கூற்றில் அட்டவணை இலக்கம் 7 இன் கீழ் மானியக் கையளித்தல் மானிய வழங்கல் மற்றும் மாற்றல்களின் உள்ளபடியான செலவினமாக நிகழ்ச்சித்திட்டம் 02 இன் செலவின விடயம் 1501, 1502 மற்றும் 1506 இன் செலவினங்களின் கூட்டுமொத்தம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 01 இன் 1506 செலவின விடயத்தின் செலவினம் ரூபா 100,186,608,556 காண்பிக்கப்பட்ட போதிலும் அட்டவணை இலக்கம் 07 இன் அந்த செலவினங்களின் திருத்தப்பட்ட பாதீட்டு நிரலில் ரூபா 110,708,344,506 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 1506 செலவின விடயத்தின் கீழான தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,800,000 காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிச் செயலாற்றல் கூற்றில் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பிட்டில் குறிப்பு 7 திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

(ஆ) ஆதனம் பொறி மற்றும் உபகரணம்

ஆதனம் பொறி மற்றும் உபகரணம் கணக்கீடு செய்யப்பட்டபோது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 நவம்பர் 01 ஆந் திகதி இலக்கம் 04/2023 என்ற அரச கணக்குகள் வழிகாட்டி 3.9 ஆம் பந்தி மற்றும் 2023 ஒக்டோபர் 03 ஆந் திகதிய அரச கணக்குகள் | 2023 ஆம் ஆண்டில் ஆரம்ப மீதி சரியானது என்பதுடன் 2022 ஆம் ஆண்டின் இறுதி மீதி சரியானதல்ல. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழிகாட்டி இலக்கம் 2023/02 இன் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களை இணக்கம் செய்யும் போது தயாரிக்கும் போதும் பிரதான நிதி உத்தியோகத்தர், பிரதான கணக்காளர் மற்றும் கணக்காளர்கள் நிதியல்லாச் சொத்துக்களின் கணக்கீட்டு ரீதியான சரியான தன்மை தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிதியல்லாச் சொத்துக்களை உரிய பிரகாரம் கணக்கீடு செய்யாமல் முன்னைய ஆண்டின் இறுதி மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கும் இடையே ரூபா 964,500 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | |

**(இ) முற்பணக் கணக்கு மீதி**

முற்பணக் கணக்கில் வருட இறுதியிலான மீதி கணக்கீடு செய்யப்பட்டபோது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 நவம்பர் 07 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 03/2023 இன் இலக்கம் 5 ஆம் பந்தியின் பிரகாரம் வழிகாட்டி இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்ட ஆலோசனைகளுக்கு இணங்க முற்பணக் கணக்கு தொடர்பான கட்டுப்பாட்டுக் கணக்கு திறைசேரி கணனி அச்சிடலுடன் தாமதமின்றி இணக்கம் செய்ய வேண்டியிருந்த போதிலும் முற்பணம் பீ கணக்கில் மீதி மற்றும் திறைசேரி புத்தகங்களுடன் ரூபா 20,487,625 வேறுபாடொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 716,896 தொகை இனங்காணப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்பட வேண்டிய அடையாளம் காணப்படாத ரூபா 716,896 ஆன நிலுவைத் தொகை கண்டறியப்பட்டு வருவதாகவும், நிலுவைத் தொகை அடையாளம் காணப்பட்டவுடன் கணக்கீடு செய்யப்பட்டு தேவையான திருத்தங்கள் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 67 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,654,710 தொகை 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நிலுவையாகக் காணப்பட்டது. இந்த கடன் மீதி 3 இற்கும் 5 வருடங்களுக்கும் இடையில் நிலுவையாக இருந்த மீதி ரூபா 563,344 தொகையும், 1 இற்கும் 3 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை மீதி ரூபா 85,595 ஆகவும் காணப்பட்டது. | இன்னும் தீர்க்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையை கண்டறிவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | வழிகாட்டியின் பிரகாரம் கடன் மீதிகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## (ஈ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

**அவதானிப்புகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | - | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 135 மற்றும் 381(i) | - | பயிற்சி நிலையங்கள் யாவற்றினதும் பணிகள் நிதி நிருவாக அதிகாரங்கள் கையளிக்காமல் நியமிக் கப்பட்ட பதவியணியினர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது டன் 03 பயிற்சி நிலையங்களில் திறைசேரி அங்கீகாரமின்றி வங்கிக் கணக்குகள் பேணிச் செல்லப்பட்டிருந்தது.. | கணக்குகளைத் திறப்பதற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் தற்போது திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளன | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 396 | 7,090,372 | I. மாவட்ட அலுவல கங்களில் வங்கிக் கணக்குகளைப் பரீட்சித்த போது 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் விநியோகிக்கப்பட்ட 06 மாதங்களை விஞ்சிய ரூபா 7,090,372 கூட்டுத்தொகையாக 139 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த பெறுமதியில் கண்டி மாவட்ட அலுவலகத்திற் குரிய 2015 பெப்ரவரி - 2016 யூலை வரை பெறுமதி ரூபா 3,888,099 ஆன 26 காசோலைகள் யாருக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது என உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | மாவட்ட அலுவலகங்களின் வங்கி இணக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள காலாவதியாகிய காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு கணக்காளர் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் மற்றும் கண்டி நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்கான எடுக்கப்பட்டு வருவதாக. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | 1,739,536 | II. ஊழியர் கடன் சுழற்சி கணக்கிற்குரிய 2023 திசெம்பர் வங்கி இணக்கக் கூற்றை பரீட்சித்த போது 5 முதல் 9 வருடங்கள் வரையான கால வீச்சில் வைப்புச் செய்யப்பட்ட போதும் வசூலிக்கப்படாத ரூபா 1,559,536 பெறுமதியான 67 காசோலைகள் மற்றும் 6 மாதங்களை விஞ்சி விநியோகிக்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 180,000 பெறுமதியான காசோலை ஒன்றும் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கி இணக்கங்கள் மீண்டும் தயாரிக்கப்பட்டு பிழையை அடையாளம் காண்பதற்கு மற்றும் மாற்றப்படாத காசோலைகள் தொடர்பாக சரிபார்த்து உறுதிப்படுத்திய பின்னர் 2024 மே மாத கணக்குகளில் பதிவு செய்யப்பட்டு திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | 2020 ஒக்டோபர் 02 ஆம் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை 05/2020 02(அ) | 26,172,500 | விற்றுத்தீர்ப்பதற்கு பொருத்தமான நிலையில் காணப்படுகின்ற பெறுமதி ரூபா 5,180,000 ஆன 3 வாகனங்கள் மற்றும் நீண்டகாலமாக தொழில்நுட்ப கோளாறுகளுக்கு உட்பட்டு கராஜ்களில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள மற்றும் டென்சில் கொப்பேகடுவ மாவத்தை களஞ்சிய வளவில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள பெறுமதி ரூபா 20,992,500 ஆன 7 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை அப்புறப்படுத்து வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், அதற்கமைவாக, அப்புறப்படுத்தப் படுகின்ற வாகனங்களின் மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டு, மேலதிக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(உ) முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) திணைக்களத்திற்குச் சொந்தமான அங்கீகரிக்கப்படாத நிதியம்**

திணைக்களத்தினால் அதிகாரமளிக்கப்படதத பின்வரும் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் வங்கி நிதிப் பிரிவிற்குச் சொந்தமான காப்புறுதி நிதியத்தையும் உள்ளடக்கிய நியதிச் சட்ட அல்லாத 15 நிதியங்களும் காணப்பட்டதுடன் அதில் தற்போது 9 நிதியங்கள் செயற்படாதிருந்ததுடன் 6 நிதியங்கள் மாத்திரமே செயற்படு நிலையில் காணப்பட்டது. இந்த நிதியங்கள் யாவற்றிலும் காணப்படுகின்ற நிதி வங்கி நிதிப் பிரிவினால் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட்டித் தொகையினையும் உள்ளடக்கி | தற்போது செயற்படாத நிதியங்களிலுள்ள நிலுவைகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தொடர்புடைய நிதியங்களை நிறுத்துதல் தொடர்பாக திறைசேரியிடமிருந்து ஆலோசனை பெறப்பட்டு அதன் பிரகாரம் மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் ற்போது | அனைத்து நிதியங்களும் சட்டரீதியாக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கபப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒட்டுமொத்த முதலீட்டு நிதியம் ரூபா 49.5 மில்லியனாக இருந்தது. | செயற்படுகின்ற நிதியங்கள் கணக்காய்வு செய்யப்படக்கூடிய வகையில் திறைசேரியின் அங்கீகாரத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | |
| (ஆ) | திவிநெகும சட்டத்தின் 44(ஆ) பிரிவின் பிரகாரம் அகற்றப்பட்ட சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை, தெற்கு அபிவிருத்தி அதிகார சபை, உடரட்ட அபிவிருத்தி அதிகார சபை போன்ற அதிகார சபைகளுக்கு உரித்தான சகல அசைவும் மற்றும் அசையாத ஆதனங்கள் அரசாங்கத்திற்கு கையளிக்க வேண்டியிருந்ததாகக் குறிப்பிடப் பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட நிறுவனங்களில் நிலையான சொத்துக்கள் சமுர்த்தி திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டதுடன் மேற்குறிப்பிடப்பட்ட நிதியங்களின் மீதியும் திணைக்களத்திற்கு கையேற்று நிலையான வைப்பாக இதுவரை வங்கி நிதி பிரிவின் கீழ் நிறுத்திவைக்கப் பட்டுள்ளது. இந்த நிதியம் தொடர்பாக திணைக்களம் வருடாந்த நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்ததுடன் இதில் எந்தவொரு நிதியத்திற்காகவும் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திவிநெகும சட்டத்தின் 44(ஆ) பிரிவின் பிரகாரம் அகற்றப்பட்ட சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அதிகார சபைகளுக்கு உரித்தான சகல அசைவும் மற்றும் அசையாத ஆதனங்கள் மற்றும் நிதியங்களின் நிலுவைகள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளன. நிலையான வைப்பாக இதுவரை திணைக்களத்தின் வங்கி நிதிப் பிரிவின் கீழ வைப்பாக வைக்கப்பட்டுள்ள நிதியம் தொடர்பாக திணைக்களம் வருடாந்த நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தமையை ஏற்றுக் கொள்வதாகவும் மற்றும் இந்த அனைத்து நிதியங்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | அனைத்து நிதியங்களும் சட்டரீதியாக்கப்பட்டு கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்பாட்டில் இல்லாத நிதியங்கள் சட்டத்தின் மேற்கூறப்பட்ட பிரிவின் பிரகாரம் மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி இலக்கம் 2020/1 அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 15(2)(இ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து முடிவுறுத்துகின்ற நிதியங்களில் செலுத்தப்பட்டுள்ள பணம் மற்றும் ஏனைய பொறுப்புக்களைத் தீர்த்துவைத்ததன் பின்னர் மிகுதியான பணம் திரண்ட நிதியத்தில் மாற்றுவதற்கும், வெளி நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் முதிர்ச்சியடைந்தவுடன் உடனடியாக திரண்ட நிதியத்தில் மாற்றுவதற்கோ அல்லது செயற்படுகின்ற நிதியத்தை நியதிச்சட்ட நிதியமாக ஸ்தாபித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வின் கீழ் கொண்டு வருவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும் முடியாதிருந்தது. அதன் பிரகாரம் இதன் மூலம் அரசாங்க நிதியை முறையற்ற விதத்தில் செல்கின்றதா என பரீட்சிக்க முடியாதிருந்ததுடன் இந்தப் பணம் அரசாங்க நிதியக் கட்டுப்பாட்டிற்கும் புறம்பாக இருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு தொடர்பாக சமுர்த்தி சட்டத்தில் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் கீழ் எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக பரிசோதிப்பதற்கும், அது தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடி இணக்கம் தெரிவிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு அதன் பிரகாரம் மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | செயற்பாட்டில் இல்லாத நிதியங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் செயற்படுகின்ற நிதியங்கள் பொது நிதிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். |
| (ஈ) | அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 பகுதி II இன் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களுக்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற காப்புதி சேவை வழங்குநர்களிடமிருந்து அல்லது அவர்களின் முகவர்களிடமிருந்து/ தரகர்களிடமிருந்து பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் கீழ் போட்டியாளர் விலை கோருவதன் மூலம் பொதுவான காப்புறுதி மேவுகை பெற முடியும். நிறுவன தலைவரால் காப்புறுதி சேவை பெற்றுக்கொள்ளும் போது ஏனைய விடயங்களுக் கிடையே உரிய கிரயம் மேவுகை செய்யப்படுகின்ற ஆபத்தின் தன்மை மற்றும் சேவையின் தரத்தன்மை தொடர்பாக நிறுவனத்திற்கு இந்த | சமுர்த்தி வங்கிகளிலுள்ள பொதுமக்களின் பணம் மற்றும் அந்த வங்கிகளின் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் பாதுகாப்புக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் காப்புறுதித் நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து, வங்கி நிர்வாகக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு, காப்புறுதி கொள்கைகளின்படி | காப்புறுதி நடவடிக்கைகள் சற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேவையைப் பெற்றுக்கொள்ளும் வசதி போன்ற விடயங்கள் கவனத்திற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் முகாமைத்துவ சபையினால் பல்வேறு சந்தர்ப்பங்களில் காப்புறுதி திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்கத்தினால் விநியோகிக்கப்படுகின்ற சுற்றறிக்கைகளுக்கு இணங்காமல் வெளியின்றியும் மற்றும் காப்புறதி மூல தத்துவங்களுக்கு இணங்காத வகையிலும் அந்த காப்புறு திட்டம் அமுல்படுத்தி இழப்பீட்டுத் தொகையும் இழப்பீடும் செலுத்தப்பட்டிருந்தது. அதற்காக நிதிய கணக்கும் பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும் அந்தக் கணக்குகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. காப்புறுதி நிதியத்திலிருந்து ரூபா 548.6 மில்லியன் அரசாங்க வங்கியொன்றில் நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கையாளப்படுவதுடன் காப்புறுதி நிதியத்தின் கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படும். | |
| (உ) | சமுதாய அடிப்படை வங்கியிலிருந்து ரூபா 40,000 மற்றும் சமுதாய அடிப்படை வங்கி சங்கத்தில் இருந்து ரூபா 25,000 வீதம் சேகரித்து கொவிட் நோயினால் மரணமடைந்த உத்தியோகத்தருக்காக ரூபா 01 மில்லியன் இழப்பீடு வழங்குவதற்கு 2021 யூன் 01 ஆந் திகதி இலக்கம் 21/88/03 என்ற முகாமைத்துவ சபை தீர்மானத்தின் மூலம் உடல்சார்ந்த விபத்துக்கள் காப்புறுதி முன்மொழிவுத் திட்டத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் மரணமடைந்த உத்தியோகத்தருக்காக ரூபா 21.79 மில்லியன் இழப்பீட்டுத் தொகை இந்த நிதியத்திலிருந்து முறையற்ற வகையில் செலுத்தப்பட்டிருந்தது. | கோவிட் மற்றும் விபத்துக் காப்பீட்டிற்கு, வங்கிச் சங்கத்திடமிருந்து ரூபா 25,000 மற்றும் வங்கியிடமிருந்து ரூபா 40,000 வீதம் அறவிடப்பட்டு கோவிட் நோயால் மரணித்த அதிகாரிகளுக்கு ரூபா 1 மில்லியன் இழப்பீட்டுத் தொகையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் 2025 ஆம் ஆண்டு முதல் இந்த காப்பீட்டு முறை செயற்படுத்தப்பட மாட்டாது. | தற்போதுள்ள சட்ட விதிகளின் பிரகாரம் அரச அலுவலர்கள் சார்பில் இதுபோன்ற காப்பீட்டு முன்மொழிவு திட்டங்களை செயற்படுத்த முடியாமையால் தவறான கொடுப்பனவு தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | வங்கி நிதிப் பிரிவில் 2023 ஆம் ஆண்டில் செலவின மதிப்பீடு ரூபா 2,496 மில்லியனாக இருந்ததுடன் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 3,443 மில்லியனாக இருந்தது. வங்கி நிதிப் பிரிவினால் வருடாந்தம் தனியாக | வங்கி நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் கீழ் செயல்படும் நுண்நிதி வங்கிப் பிரிவின் செயற்பாடுகள் சுயாதீனமாக | வங்கி நிதிப்பிரிவிற்கு ஒரு சுயாதீன அலகாகச் செயற்பட முடியாது என்பதால், தனியான நிதிக் கூற்றுக்கள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் வருடாந்த நிதிக் கூற்றுக்களும் தயாரிக்கப்படுகின்றது. இவ்வாறே திணைக்கள செலவின விடயத்தில் சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்ற திணைக்களம் ஒரு பிரிவினால் சட்டரீதியற்றதாக தனியான பாதீட்டு மற்றும் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து மற்றும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கருதப்படுகிறது. இதற்குக் காரணம், சமுர்த்திச் சட்டத்தின் 25(3) ஆம் பிரிவின்படி, சுயாதீன ஒருங்கிணைந்த அமைப்பான சமுதாய அடிப்படயிலான வங்கி அமைப்பு இப்பிரிவின் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றது. அதன் பிரகாரம் அப்பிரிவின் செலவினங்களை மேற்கொள்வதற்கு தனியான செலவு மதிப்பீடொன்று தயாரிக்கப்படுவதுடன் நிதிக்கூற்று ஒன்றும் தயாரிக்கப்படுவதாக. | வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்க முடியாது. வங்கி அமைப்பு திணைக்களத்தின் கீழ் கட்டுப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமுர்த்தி நலனாளிகளின் உதவித் தொகையிலிருந்து கட்டாய சேமிப்பாக நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 43,472,014,278 ஆன தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீட்டு வட்டி ரூபா 2,819,900,095 ஆகும். வங்கி நிதிப் பிரிவினால் 2023 ஆம் ஆண்டின் போது 11 சதவீதத்திலிருந்து 26 சதவீதம் வரையான வட்டி விகிதத்தின் கீழ் கட்டாய சேமிப்புப் பணம் முதலீடு செய்யப்பட்ட போதும் வங்கிக்கு 5 சதவீதம் ஆன குறைந்த வட்டி விகிதமே வழங்கப்பட்டிருந்தது. அதில் சமுர்த்தி நலனாளிகளுக்கு செலுத்த வேண்டிய வட்டி முகாமைத்துவத் தீர்மானத்தின் பிரகாரம் 04 சதவீதம் ஆகும். கட்டாய சேமிப்புப் பணம் நேரடியாக வங்கிக்கு அனுப்பப்படாமல் வங்கி நிதிப் பிரிவில் நிறுத்திவைக்கப்பட்டு முதலீடு செய்வதன் மூலம் சமூக அடிப்படை வங்கியினாலும் முதலீடு செய்யக்கூடிய வட்டி வருமானத்தை விட குறைந்த வட்டி உரித்தாகின்றமை மற்றும் அந்த பணம் மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கடனுக்கு வழங்கும் இயலுமை குறைவாக இருந்தமை போன்ற | 2022 முதலீட்டு பேரேட்டின் பிரகாரம் அங்கீகரிக்கப்படாத கட்டாய சேமிப்புத் தொகையானது வட்டி வருமானம் ஈட்டுவதற்காக முதலீடு செய்யப்பட்டுள்ளதாக மற்றும் கட்டாய சேமிப்புப் பணத்தில் இருந்து, பொதுத் திறைசேரியால் ரூபா 23.477 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அத்தொகைக்கான முதலீட்டு வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் இப்பணம் உண்மையில் பயனாளிகளின் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் இதனால் அனைத்து பயனாளிகளிடையேயும் ஈட்டப்பட்ட வருமானத்திலிருந்து வட்டி செலுத்தும்போது பெறப்படும் வட்டியை விட செலுத்தப்பட்ட வட்டி அதிகமாக உள்ளது. மேலும் குறைந்த வட்டி | கட்டாய சேமிப்புத் தொகையானது பயனாளிகளின் வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பாதகமான நிலைமையும் எழுந்திருந்தது. | விகிதத்தில் பயனாளிகளுக்கு செலுத்துவதற்கு இந்த விடயம் தாக்கமளித்துள்ளது. | |

**(ii) வங்கி நிதிப் பிரிவிற்குச் சொந்தமான நிதித்திலிருந்து ஊழியர்களுக்கான கடன் வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற சமூக வங்கி, மாவட்ட அலுவலகம் மற்றும் வங்கி நிதிப் பிரிவு பதவியணியினரின் உத்தியோகத்தர்களுக்காக தாபனவிதிக் கோவையின் XXIV அத்தியாயத்திற்கு முரணாக ஊழியர் நுகர்வுக் கடன், சேவை ஊழியர் வீட்டுக் கடன், விஷேட ஊழியர் கடன் மற்றும் விஷேட இடர் கடன் ஆக சேவை ஊழியர் கடன் முன்மொழிவு திட்டங்களின் மூலம் கடன் வழங்கி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14.2 பில்லியன் தொகையொன்று (வெளியார் மீதி) அறவிட வேண்டியிருந்தது. இந்த ஊழியர் கடனில் ரூபா 290.6 மில்லியன் தொகையொன்று செலுத்தாமல் புறக்கணித்தமையின் காரணமாக அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அறவிட முடியாக் கடனாக ஒதுக்கப்பட்டிருந்தது. | பிரிவில் உள்ள பல்வேறு நிதியங்கள் இதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களிடமிருந்து வழங்கப்படுகின்ற கடன் வகை அந்தந்த வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் நிதியங்களிலிருந்து வழங்கப்படுகின்றன. அவ்வாறே இந்த கடனை வழங்குவதற்கு வங்கி மற்றும் வங்கிச் சங்க நிர்வாக சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | அரச அதிகாரிகளுக்காக நிதியம் பயன்படுத்தப்பட்டு தாபனக் கோவைக்கு மற்றும் நடைமுறையில் உள்ள சட்டங்கள் விதிகளுக்கு புறம்பாக ஊழியர் கடன்களை வழங்க முடியாது என்பதால், தற்போது அறவிடப்படாத நிலுவைகள் பொதுக் கணக்குகள் சுற்றறிக்கையின்படி கையாளப்பட வேண்டியதுடன் கடன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் நிதி பிரிவின் கீழ் காணப்படுகின்ற ஊழியர் கடன் சுழற்சி நிதித்தின் 2023 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 30,449,227 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் இருந்து இந்த சுழற்சி கடன் முன்மொழிவுத் திட்டம் கைவிடப்பட்டிருந்தது. ஊழியர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தொகையில் ரூபா 186 மில்லியன் தொகை | ஊழியர் கடன் சுழற்சி நிதித்தின் கணக்குகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும், பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

திறைசேரிக்கு அனுப்பபட்டிருந்தது. சமுர்த்தி அதிகார சபை காணப்பட்ட காலத்தில் எழுந்து இருந்த இந்த நிதியம் 2014 ஆம் ஆண்டில் இருந்து 2023 ஆம் ஆண்டு வரை நிதிக்கூற்றுக்களை தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(iii) தீர்த்து வைக்கப்படாத மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமுர்த்தி நலனாளிகளின் கட்டாய சேமிப்பு கணக்குளில் காணப்படுகின்ற பணம் மற்றும் 2020 ஆம் ஆண்டின் போது வாழ்வாதார நிலைமையை சிறந்த நிலையில் பேணிச் செல்லும் நோக்கில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ரூபா 5,000 படியொன்றை வழங்குவதற்காக வங்கி முறைமையின் மூலம் ரூபா 32,418 மில்லியன் தொகை பெறப்பட்டு 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிக்கு அந்த பணத்தை மீளளிப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் வங்கிப்பிரிவின் நிதியத்தை திருப்பிச் செலுத்துவதற்காக 1501 (4) செலவின உருப்படியின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 36 பில்லியன் தொகையில் இருந்து 2024 ஆம் ஆண்டில் இந்தத் தொகை திருப்பிச் செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | வங்கி அமைப்பில் இருந்து எடுக்கப்பட்ட பணத்தை வங்கிகளுக்குத் திருப்பி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(iv) வங்கி முறைமையில் ஏற்பட்ட நிதி மோசடி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வங்கி முறைமையில் இடம் பெற்ற நிதி மேசடி தொடர்பான விசாரணை புலனாய்வு நடவடிக்கைகள் ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளுக்காக வருடாந்தம் பணம் செலவிடல் திணைக்களத்தின் செலவின விடயத்தில் 2023 ஆம் ஆண்டிற்குரிய புலனாய்வு நடவடிக்கைகளுக்காக பிரயாண செலவினத்திற்காகவும் ரூபா 4,733,099 தொகையும் மற்றும் ஏனைய செலவின விடயங்களுக்காக ரூபா 1,980,421 | வங்கி நிர்வாக சபைக்கு இது குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக. . | வங்கி அமைப்புக்காக மேற்கொள்ளப்படும் ஏற்படும் செலவுகள் வங்கிகளினால் மீளச் செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்த மோசடி செய்யபப்பட்ட பணத்தை மீண்டும் வங்கி முறைமையில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் 209 மோசடி மற்றும் குற்றங்களிலிருந்து ரூபா 35,715,777 தொகையொன்று வங்கி முறைமையில் இருந்து அறவிடலாக பெறப்பட்டிருந்தது. வங்கி முறைமை நிருவாக செயற்பாடுகள் நிதி நடவடிக்கைகள் நியதிச் சட்டம் அல்லாத நிதியம ஒன்றின் மூலம் நிருவகிக்கப்படுகின்றமையால் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகின்ற ஆமற்கூறப்பட்ட படிகள் வங்கி நிதியத்திலிருந்து மேற்கொள்ளாமல் திணைக்கள செலவின விடயத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 ஒக்டோபர் 23 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2023/02 இன் 5 ஆம் பந்தியில் (iii) விடயங்களின் பிரகாரம் செயல் நிமித்த உப கட்டு நிதி குறித்துரைத்த மற்றும் தேவையற்ற பணிகளுக்காக உரிய மதிப்பீடு இன்றி விநியோகித்ததன் காரணமாக உரிய நிதியில் இருந்து கவணத்தில் கொள்ளக் கூடிய அளவு பயன்படுத்தப்படாமல் 16 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த பணம் ரூபா 770,630 ஆக இருந்ததுடன் முற்பணத் தொகையில் ரூபா 517,319 மீள தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடும்போது மற்றும் அவற்றுக்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது தேவையான பணிகள் முறையாகக் கண்டறியப்பட்டு, சரியான மற்றும் யதார்த்தமான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு உளளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் முறைமைப்படுத்தப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | தேவைக்கு ஏற்ப, செயல் நிமித்த இடைக்காலக் கட்டுநிதி . விடுவிக்கப்பட வேணடியதுடன் மீளத் தீர்ப்பனவு சுற்றறிக்கையின்படி மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 2.2 வைப்பு மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொது வைப்புக் கணக்கின் கால பகுப்பாய்வு படி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான அலுவலகத்திலும் மாவட்ட அலுவலகங்களிலும் தீர்த்து வைக்கப்படாமல் முன்கொண்டு வரப்படுகின்ற 02 வருடங்களுக்கு மேற்பட்ட தீர்த்து வைக்கப்படாத மொத்த மீதி ரூபா 2,378,777,131 ஆகும். அதில் 2 – 5 வருடங்களுக்கு இடையிலான மீதி ரூபா 3,079,925 ஆகவும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 2,375,697,206 ஆகவும் இருந்தது. | சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தால் சமுர்த்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகையில் மேலும் தீர்க்கப்பட வேண்டிய மீதியான ரூபா 2.3 பில்லியனைத் தீர்ப்பதற்கு பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மற்றும் உரிய அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு இக்கடப்பாட்டினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | ரூபா 2.3 பில்லியனைத் தொகையானது திணைக்களத்தின் கீழ் உள்ள வங்கி நிதிப் பிரிவிற்குச் செலுத்தப்பட வேண்டும் என்பதால் மற்றும் அந்தப் பிரிவிற்குச் சொந்தமான நிதியங்கள் எதுவும் சட்டப்பூர்வமானதாக இல்லாமையால் திணைக்களத்திற்கும் வங்கி நிதிப் பிரிவிற்கும் இடையில் உள்ள கணக்குக் குறிப்புகள் மூலம் மீதிகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.3 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

வங்கிக் கணக்கு செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் கணக்காளரின் மேற்பார்வை இன்றி வங்கி நிதிப் பிரிவின் கீழ் 11 நடைமுறை கணக்குகள் மற்றும் பொது சங்கங்களின் பெயரில் 2 நடைமுறை கணக்குகள் மற்றும் சேமிப்பு கணக்கு ஒன்றும் பேணிச்செல்லப்பட்டிருந்தது. இந்தக் கணக்குகளில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 42 மில்லியன் ஆகும். நிதிப்பிரமாணம் 381 இன் | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னர், சமுர்த்தி அதிகாரசபை இருந்த காலத்தில், இந்த நடைமுறை கணக்குகள் வங்கிப் பிரிவால் பல்வேறு வேலைத்திட்டங்களுக்காக் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரகாரம் இதில் எந்தவொரு நடைமுறை கணக்கு தொடர்பாகவும் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பராமரிக்கப்பட்டு வந்துள்ளதுடன் அதன் பிரகாரம் இந்த வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன. திணைக்களமாக மாற்றப்பட்டபோது திவிநெகும சட்டத்தின் 45 வது பிரிவின் பிரகாரம் காணப்பட்ட முறையில் இந்த கணக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதி விடுவிக்கப்பட்ட போதும் செயல்முன்னேற்றத்தை பெறாதிருந்த செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு உணவு பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் நச்சில்லாத உள்நாட்டு உணவு உற்பத்தியில் ஈடுபடுகின்ற சிறு அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கும் ஏனைய பல்வேறு உற்பத்திகளை மேற்கொள்கின்ற சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு நிரந்தர சந்தையொன்றை வடிவமைத்து வழங்குதல் மற்றும் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை அதிகரித்தல் மற்றும் வாழ்வாதார நிலையை கட்டியெழுப்பும் நோக்காக கொண்டு நாடு முழுவதும் 31 இயற்கை உணவகங்கள் ஆரம்பிப்பதற்காக ரூபா 171,370,352 தொகை 2019 ஆம் ஆண்டு இல் இருந்து 2021 ஆம் ஆண்டு வரை செலவிடப்பட்டிருந்தது. இதனிடையே 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 8,969,457 செலவில் நிர்மாணிக்கப்பட்ட அகிமினிமன மற்றும் அபராதுவ இயற்கை உணவகங்கள் இரண்டும் வியாபார நடவடிக்கைகள் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அக்மீமன மற்றும் ஹபராதுவ ஆகிய இரண்டு உணவகங்களின் எஞ்சிய அத்தியாவசிய நிர்மாணங்களுக்கான ஒதுக்கீடுகள் கிடைக்காத காரணத்தினால் அதில் விற்பனை நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் அக்மீமன சமுர்த்தி இயற்கை உணவகத்தின் எஞ்சிய நிர்மாணப் பணிகளுக்காக பரவலாக்கப்பட்ட நிதியத்திலிருந்து ரூபா 2.335 மில்லியன் தொகை பெறப்பட்டுள்ளதுடன் தற்போது நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் பணி நடைபெற்று வருகின்றது. | விற்பனை நிலையங்களின் நிர்மாணங்களை நிறைவு செய்து குறைந்த வருமானம் பெறுவோருக்கு வழங்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | குருவிட்ட காஹேன்கம சமுர்த்தி வியாபார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,930,000 செலவிடப்பட்டிருந்தது. கடைகளை நிர்மானித்தல் மேலும் அபிவிருததி செய்யக் கூடிய வகையில் கொங்கிறீட் தட்டு ஒன்றை இட்டு கீழ் மாடியில் 9 அறைகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் பூர்த்தி செய்யப்படாத 2 அறைகள் இரண்டு தனி நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கடைகள் முறைட்ற வகையில் நிருமாணிக்கப்பட்டதன் காரணமாக கடை உரிமையாளுர்களுக்கு கழிவுப் பொருட்களை அகற்றுதல், போதியளவான உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படாமை, போன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டிருந்தது. | 2 கடை அறைகள் தொழில் முயற்சியாளர்களின் கோரிக்கையின் பேரில் அவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் அதற்கான ஒதுக்கீடுகள் கிடைத்த பின்னர் காணப்பட்ட குறைபாடுகள் சரி செய்யப்பட்டு வழங்கப்படுவதாகவும் குருவிட்ட பிரதேச செயலாளரினால் தெரிவிக்கப்பட்டிருந்ததாக. | கடை அறைகளை முறையாக குறைந்த வருமானம் பெறுவோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேணடியதுடன். தற்போதுள்ள பிரச்னைகளை தீர்த்து, அதிகபட்சமாக நிலையங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | புத்தளம் - கருவலகஸ்வெவ இயற்கை உணவகத்துக்காக ரூபா 1,065,600 தொகை 2018 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 5 நபர்களால் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தற்போது வரையில் நிலையத்தில் நீர் மின்சார இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டு காடு வளர்ந்து காணப்பட்டது. | 05 சமுர்த்தி பயனாளிகளை உள்ளடக்கி உணவகத்தின் விற்பனை நடவடிக்கை 2020.02.07 அன்று ஆரம்பிக்கப்பட்டது, ஆனால் கொரோனா தொற்று காரணமாக இந்த உணவகம் மூடப்பட்டது. கருவலகஸ்வெவ பிரதேச அமைப்பினால் அண்மைக்காலம் வரை வாராந்த சந்தை நடாத்தப்பட்டு வருவதுடன் உரிய அங்கீகாரத்தின் பின்னர் பிரதேச அமைப்பிற்குச் சொந்தமான நிதியின் மூலம் இக்கட்டிடங்களை புனரமைத்து புதிய செயற்திட்டங்களை ஆரம்பிக்க முடியும் என கருவலகஸ்வெவ பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். | புனரமைப்பு நடவடிக்கை பிரதேச செயலாளரினூடாக செய்யப்பட்டு நிலையத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பரிவில் அமைந்துள்ள மானவேரிய மாவட்ட சந்தைப்படுத்தல் நிலையம் ரூபா 12,193,773 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2019 யூன் | மனவேரிய மாவட்ட விற்பனை நிலையத்தின் நிர்மாணம் தொடர்பான ப் பிரச்சினைக்கு உரிய பதில்களை வழங்குமாறு | திணைக்களம் தலையிட்டு இந்த நிர்மாணம் குறித்து விசாரணையொன்று நடாத்தப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2019 முதல் அவ்வப்போது 15 தொழில் முயற்சியாளர்களுக்கு அண்ணளவான அளவில் வியாபார நடவடிக்கைகள் மேற்காள்ளப்பட்ட போதும் தற்போது இருவர் மாத்திரம் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து எந்தவொரு வாடகைத் தொகையும் அவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையம் புறன் நிலமாக குறிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டமையால் நிலம் வெடித்து சென்றிருந்ததுடன் கீழ் இறங்கும் நிலைக்கும் உட்பட்டிருந்தமையும் 2024 சனவரி 12 ஆம் திகதி மேற்கொண்ட களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இந்த நிலையத்திற்காக ஆரம்பத்திலிருந்து நீர் வசதிகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட பொறியாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட சந்தைப்படுத்தல் விடயப் பொறுப்பு முகாமையாளரினால் தெரிவிக்கப்பட்டது. | விற்பனை நிலையத்தை ஆக்கபூர்வமாக பயன்படுததுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மாத்தளை மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டில் 11 பிராந்திய செயலகப் பிரிவுகளுக்கு வாழ்வாதார விசேட செயற்திட்டத்திற்காக ரூபா 3,708,710 செலவிடப்பட்டிருந்தது. இத்துடன் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது ரூபா 2,094,825 ஆன வழங்கப்பட்ட உபகரணங்கள் செயலற்றுக் காணப்பட்டதுடன் ரூபா 275,662 ஆன உபகரணங்கள் உடைந்திருந்தன. ரூபா 184,350 ஆன உபகரணங்கள் விற்கப்பட்டு மற்றும் அடமானம் வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 134,273 ஆன உபகரணங்கள் கணக்காய்வின்போது பௌதீக ரீதியாக அவதானிக்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | செயற்திட்டம் தொடர்பாக பின்தொடரல் நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டு முதல் 2023 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்குரிய திணைக்கள புலனாய்வுப் பரிவில் நிதிப் பெறுமதி ரூபா 234,961,395 ஆன 165 நிதி மோசடிகள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அதில் மேலும் ரூபா 218,482,947 ஆன 98 மோசடிகளுக்குரிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் 2014 சனவரி 03 ஆம் திகதி முதல் 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை வங்கி மற்றும் வங்கி சங்கங்களில் ஏற்பட்டிருந்த நிதி மோசடிகளில் ரூபா 263,817,207 ஆன 15 மோசடிகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. உத்தியோகத்தர்களினால் தொடர்ச்சியாக இவ்வாறு நிதி மோசடிகள் மேற்கொள்வதற்கு வங்கி முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை தயாரித்தல் மற்றும் ஒழுக்காற்று உத்தரவு மூலம் தண்டனைகள் இலகுவாக்கப்படுதலும் மோசடிகள் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. | தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிதி மோசடிகள் தொடர்பில் சமுர்த்தி வங்கி முறைமையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு நுண்நிதிப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் ஒழுக்காற்று உத்தரவு மூலம் கடும் தண்டனை வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | நிதி மோசடிகள் நிகழாத வகையில் வங்கி அமைப்பில் உள்ள குறைபாடுகளை சரி செய்து, ஒழுக்காற்று உத்தரவுகளை கடுமையாக்குவதுடன் மற்றும் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் தொடர்பான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் II பகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பந்திக்குரிய 2019 செப்டெம்பர் 30 ஆம் திகதிய அரச நிருவாக சுற்றறிக்கை 30/2019 இன் மூலம் ஆரம்ப விசாரணைகள் 2 மாதத்திற்குள் பூர்த்தி செய்யப்படவேண்டியிருந்த போதிலும் மோசடி ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பாக ஆரமப் விசாரணை மேற்கொண்டு ஒழுக்காற்று உத்தரவு வழங்குதல் தாமதமடைதல் 2 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையிலான கால வீச்சினை கொண்டிருந்தது. | விசாரணைகளின் தன்மை காரணமாக, குறிப்பிட்ட காலத்திற்குள் அவற்றை முடிப்பதற்கு முடியாது. இருப்பினும், அதற்கான நேரத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது | விசாரணைகள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும கட்டனைச் சட்டத்தில் 36 ஆம் பிரிவின் கீழ் திவிநெகும அபிவிருத்தி நிதியம் ஸ்தாபிக்கப்படவேண்டியிருந்ததுடன் திணைக்களத்தில் கிடைக்கின்ற சகல மானியங்கள், நன்கொடைகள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட வங்கி மற்றும் வங்கி சங்கத்தினால் நன்கொடையாக ஏனைய பங்களிப்புப் பணம், வங்கிகளின் இலாபத்தில் அமைச்சரால் குறித்துரைக்கப்படுகின்ற நிதிச் சதவீதமொன்றாக சகல பெறுவனவுகளும் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டு அதன் பின்னர் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் திவிநெகும அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிதியம் இதுவரை ஸ்தாபிக்கப்பட்டிருக்வில்லை.<br>திவிநெகும அபிவிருத்தி நிதியம் ஸ்தாபிப்பதற்கு திறைசேரியின் எதிர்ப்புயின்றிருந்தமை 2021 மே 03 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சமுர்த்தி நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு ஒன்பது தடவைகள் அரச நிதி திணைக்களத்திடம் அங்கீகாரம் கோரப்பட்ட போதிலும் இதுவரை அதற்கான அங்கீகாரம கிடைக்கப்பெறாததால் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு முடியாதிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சமுர்த்தி சமூக அடிப்படை வங்கி கொடுக்கல் வாங்கல்களை செயற்திறனாக்குவதற்காக Soft Watch மற்றும் SLTS ஆக இரண்டு மென்பொருள்கள் அறிமுகப்பட்டிருந்தது. Soft Watch மென்பொருள் 326 வங்கிககள், 104 சமுர்த்தி சங்கங்களுக்காக வழங்கப்பட்டிருந்ததுடன் SLTS மென்பொருள் 756 வங்கிகள் மற்றும் 229 வங்கிச் சங்கங்களுக்காக வழங்கப்பட்டிருந்தது. முறைமையை அமுல்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது இணைய தள தொடர்பு வீழ்ச்சியடைந்திருந்தமை கடன் கணனி மயப்படுத்தல் மூலம் நாளது வரையாக்கப்படாமை, நாளொன்றுக்கு வரையறுத்த கொடுக்கல் பணம் செலுத்துதல் மாத்திரம் அமுல்படுத்தப்படக் கூடியதாக இருந்ததுடன் முறைமை மந்தகதி அடைந்தமை கடன் அறவிடும் போது முறையாக இருக்காமை கடன் மீதி சரியாக இருக்காமை முன்னைய | இணையத்தள இணைப்புகள் பழுதடைந்துள்ள காரணத்தினால் வங்கியின் செயற்பாடுகளைத் தொடர்ந்து பராமரிப்பதற்கு Backup இணையத்தள வசதியொன்றை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், தேவையான திறன் அளவு Server வசதிகளை வழங்குவதன் மூலம் கணனிகளின் மந்தநிலை நீக்கப்பட்டுள்ளதாகவும், கணனி அமைப்புகளுக்கான சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் இரண்டில் உள்ள ஒரு சில அதிகாரிகள் மட்டுமே அமைப்புகளுக்களின் தரவுகளை அணுகுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும் | அமைப்பை செயற்திறனுடன் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுக்கல் வாங்கல்கள் பரீட்சிக்க முடியாமை இருந்தமை. கணனி முறைமை அவ்வப்போது செயல் இழந்தமை, வங்கியின் நேரடி தரவுகள் உள்ளடக்கும் இயலுமை மென்பொருள் நிறுவனத்திற்கு காணப்பட்டதன் காரணமாக தரவு மாற்றப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக சமூக வங்கி கணனி முறைமை செயற்திறன் ஆக்குவதற்காக 2023 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும் அதில் குறிப்பிடப்பட்ட 6 வழுக்கள் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை | மற்றும் வங்கிகளின் கையேட்டு செயன்முறையில் ஏற்பட்ட பிழைகளை சரி செய்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (உ) | சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முறைமை மூலம் 34 கடன் வகைகளின் 12,309,785 நலனாளிகளுக்காக கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் 350,604 நலனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் வெளியில் இருந்த கடன் மீதி ரூபா 73.8 பில்லியன் ஆகும். 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளியில் இருந்த கடன் மீதியில் 8 சதவீதம் அறவிட முடியாக் கடனாக ஒதுக்கப்பட்டிருந்தது. அது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 1 சதவீத அதிகரிப்பாகும் ஒட்டு மொத்த வங்கி முறைமைக்கும் சொந்தமான மொத்த முதலீடு ரூபா 242 பில்லியன் ஆக இருந்த போதும் நலனாளிகளுக்காக வழங்கப்பட்ட கடன் அளவு ரூபா 73.8 பில்லியன் ஆகும். அது ஒட்டுமொத்த முதலீட்டில் 30 சதவீதம் மாத்திரம் ஆகும். | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கொரோனா தொற்று நிலைமை மற்றும் பொருளாதார மந்தநிலை காரணமாக நாட்டில் ஏற்பட்ட வணிக ஸ்திரமின்மை காரணமாக, வங்கி அமைப்பில் கடனுக்கான தேவை வேகமாக குறைந்திருந்ததாகவும் மற்றும் 2023 ஆம் ஆண்டு முதல் வங்கி அமைப்பில் கடன் வழங்கல் படிப்படியாக அதிகரித்து, 2023 திசெம்பர் 31 வரையில் வெளியில் இருந்த கடன் அளவு அதிக மதிப்பொன்றை எடுத்திருந்ததாகவும் , தொற்றுநோய் காரணமாக கடன் அறவீடு குறைவடைந்தமை மற்றும் சமுர்த்தி வங்கிகளில் கடன் சதவீதத்தை அதிகரிப்பதற்குப் பல வகையான கடன்கள் புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. | வங்கி அமைப்பிற்கு சொந்தமான பணத்தை முதலீடு செய்வதற்கு பதிலாக, நலனாளிகளுக்கு கடன் வழங்குவதை அதிகப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், கடன் அறவீடு திறமையாக செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | இராணுவத்தினர்களுக்காக இராணுவ படைவீரர்களுக்காக வீட்டு கடன் உத்தேச திட்டம் அமுல்படுத்தி கடன் மீள செலுத்தாமையினால் அல்லது ஏனைய செயற்பாடுகளினால் சமுர்த்தி | சமுர்த்தி வங்கி மட்டத்தில் இருந்து தகவல்கள் பெறப்பட்டு வருகின்றன, ஒரு மாதத்திற்குள் தகவல்களைப் பெற்றுக் | அறவிட வேண்டிய கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| அதிகார சபைக்கு ஏற்படுகின்ற நட்டம் அல்லது செலவினங்கள் அது பிரிந்து செல்கின்ற முறையில் அமுல்படுத்துவதற்கு இணங்கி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 100 மில்லியன் தொகை இலங்கை சமுர்த்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சமுர்த்தி வங்கியினால் இராணுவத்தினருக்காக 11,929 இராணுவத்தினரக்காக ரூபா 3,547,133,064 தொகை கடனாக விநியோகிக்கப்பட்டிருந்தது. அந்த வீரர்கள் வீட்டுக் கடன் திட்டத்திற்காக சமுர்த்தி அதிகார சபைக்கும் இலங்கை வெளிநாட்டு பணியகத்திற்கும் இடையே 2012 மார்ச் 07 ஆந் திகதி 05 வருட காலத்திற்காக புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2018 மார்ச் 06 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. புதிய புரிந்துணர்வு உடன்படிக்கை விரைவாக கையொப்பமிட்டு கடன் செயற்திட்டத்தை எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதும் 2023 ஒக்டோபர் 30 ஆந் திகதி வரையிலும் இரு தரப்பினராலும் புதிய புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. அதன் பிரகாரம் மேலும் அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 193,078,303 ஆகும். | கொள்ள முடியுமென்பதுடன் அதன் பின்னர் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துடன் கலந்துரையாடி தேவையான முடிவுகளை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதற்காக திகதியொன்று ஒதுக்குமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | ---------------------------------- | --------------- |
| (அ) | 2020/13 மற்றும் 2020 செப்டெம்பர் 27 ஆந் திகதிய திணைக்கள சுற்றறிக்கையின் மூலம் திணைக்களத்தின் உள்ளக | 2020 மார்ச் 11 இல் நடைபெற்ற சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்க | திவிநெகும சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி வங்கிகள் மற்றும் சங்கங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுப் பிரிவினால் வெளிவாரி கணக்காய்வாளராக செயற்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் உரிய வெளி கணக்காய்வு மேற்கொள்வதற்காக திணைக்களம் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு ஒரு கணக்காய்வு அறிக்கைக்காக ரூபா 3,000 வீதம் 1007 வங்கி மற்றும் வங்கி சங்கங்களுக்குரிய அறிக்கைகள் கணக்காய்விற்காக ரூபா 12,885,672 தொகை வங்கி நிதிப் பிரிவினால் செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக 2020 ஒக்டோபர் 15 ஆம் திகதிய இலக்கம் 2020/75/05 என்ற முகாமைத்துவ சபைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது கணக்காய்வு மூல தத்துவங்களுக்கு இணங்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவ சபையின் தீர்மான இலக்கம் 2020/60/09 இன் பிரகாரம் 2013 முதல் 2019 வரையிலான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டு அந்த அறிக்கைகளை அங்கீகரிப்பதற்கு உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. | திணைக்களக் கணக்காய்விற்கு உட்படுத்தப் பட்டுள்ளதால் கணக்காய்விற்காக வங்கிகள் மற்றும் சங்கங்களிலிருந்து அதற்கான பணத்தை அறவிடுவதற்கு முடியாததால் இந்த வழங்கப்பட்ட பணத்தை உரிய அதிகாரிகளிடமிருந்து மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 12 மாவட்டங்களுக்குரிய 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய சமூக அடிப்படை வங்கி மற்றும் 197 வங்கி சங்கங்களின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு செய்து கணக்காய்வு அபிப்பிராயம் 2024 மார்ச் 28 ஆம் திகதி வரையிலும் விநியோகிக்கப்படாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் 1074 சமுதாய அடிப்படை வங்கிகளில் 33 மற்றும் 331 வங்கிச் சங்கங்களில் ஒரு சங்கத்திலும் ஆக 1455 சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கி சங்கங்களில் நிதிக் கூற்றுக்களுக்கிடையே கணக்காய்வு மேற்கொண்டு 34 நிதிக் கூற்றுக்களுக்கு மாத்திரமே அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தது. | இந்த வங்கிகள்/வங்கிச் சங்கங்கள் திட்டவட்டமாக கண்டறியப்பட்டு, மேற்பார்வை அதிகாரிகளால் சரிபார்க்கப்பட்டு, அவதானிப்புகளைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் , அவற்றின் முன்னேற்றம் எதிர்காலத்தில் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் உடனடியாக கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் சமுர்த்தி சமூக அடிப்படை வங்கி மற்றும் சங்கங்களின் இறுதி கணக்குகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் தொடர்பான செயல் முன்னேற்ற அறிக்கையின் படி 2015 முதல் 2019 வரை 5 வருடங்களில் 6710 நிதிக் கூற்றுக்களில் 2492 நிதிக் | குறிப்பிட்ட ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டு, அவதானிப்பு அறிக்கைகள் வழங்கப்பட்ட போதிலும், அந்த அவதானிப்புக்களை திருத்தம் செய்வதில் கவனம் செலுத்தாமல், | உள்ளக கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவு துறை ஆகியவை வங்கி அமைப்பின் செயற்திறனுக்காக அதிகபட்ச பங்களிப்பை வழங்க |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களின் அபிப்பிராயம் மறுப்பாக்கப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தி இருந்த நிதிக் கூற்றுக்கள் 782 மாத்திரம் ஆகும். 21 மாவட்டங்களுக்குரிய 297 வங்கிகள் 2919, 2020 மற்றும் 2021 என்ற மூன்று ஆண்டுகளுக்குமுரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயம் மறுப்பு அபிப்பிராயமாக இருந்தது. அதன் பிரகாரம் சமுர்த்தி வங்கி முகாமையாளர்களால் அந்த வங்கிகள் சரியான மேற்பார்வையும், புலனாய்வு உத்தியோகத் தர்களால் சரியாக விசாரணைகளும், கணக்காய்வு உத்தியோகத்தர்களினால் சமுர்த்தி வங்கிகளின் உள்ளக நிர்வாகம் நலிவானதாக இருந்தமையை இனங்கண்டு அவற்றை சரிசெய்வதற்கும், நிதிக் கூற்றுக்களை சரியாக தயாரிப்பதற்கும் மற்றும் வங்கி முறைமையின் செயற்திறன் வினைத்திறனைக் கட்டியெழுப்புவதற்கும் ஆகக் கூடிய பங்களிப்பு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட ஆண்டிற்கான கணக்காய்வின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. | வேண்டியதுடன் வங்கிகள் மற்றும் சங்கங்களினால் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2015 முதல் 2019 வரையான ஆண்டுகளில் சமூக அடிப்படை வங்கிகளின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்து உள்ளபடியான மற்றும் நியாயமாக விநியோகிக்கப்பட்டுள்ள 782 நிதிக் கூற்றுக்களுக்கிடையே 49 நிதிக் கூற்றுக்களின் அறவிட முடியாக் கடன் விகிதம் உயர்ந்து சென்றமையின் காரணமாக இலாப விகிதத்திற்காக அனுமதி வழங்கப்படாதிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நுன்நிதிப் பிரிவிற்கு கிடைத்த கணக்காய்வு செய்யப்பட்ட 6710 இன் நிதிக் கூற்றுக்களில் இலாப ஒதுக்கீட்டிற்காக அங்கீகாரம் 1735 நிதிக் கூற்றுக்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பங்குதார்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 6,344,018,725 இலாபப் பங்கை செலுத்துவதற்கு முடியாதிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | பங்குதாரர்களின் வருடாந்த இலாபத் தொகையை சீரான இடைவெளியில் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் ஐயக்கடன் விகிதத்தைக் குறைப்பதற்கும், சரியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறை விதிக் கோவையின் பிரகாரம் 97 ஆவது பிரிவின் படி நியமனங்களுக்குரிய சான்றிதழ்களில் சரியான தன்மை நியமனம் அதிகாரியினால் ஒரு வருடத்திற்குள் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் 59 ஆவது பிரிவின் படி அரசாங்க சேவையின் எந்தவொரு பதவிக்கும் யாரேனுமொரு நபரினால் நியமன அதிகாரிக்கு பிழையான தகவல்கள் அல்லது போலியான (பொய்யான) ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்படுமிடத்து அந்த நியமனம் உடனடியாக இரத்துச் செய்து அதனை பூச்சிய மற்றும் அதிகாரமற்றதாக்கி அதுவரையில் சம்பளம் மற்றும் படிகளாக அரசாங்கத் தினால் செலுத்தப்பட்டுள்ள சகல பணமும் அந்த உத்தியோகத்தரினால் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும் உத்தியோகத்தர் 363 பேர்களினால் தமது நியமனத்திற்காக நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஆளணித் தொகைக்கு சமர்ப்பிக்கப்பட்ட கல்விச் சான்றிதழ் போலியான சான்றிதழ்களாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதில் 77 பேர் சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்ததுடன் 20 பேர் சட்டத்தின் பிரகாரம் இழப்பீடு கோரும் இணக்கப்பாட்டில் சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்தனர். தெரிவுக் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சேவையாற்றி ஓய்வூதியச் சம்பளமின்றி சேவை முடிவுறுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 30 உத்தியோகத்தர்களினால் நியமனத் திகதியிலிருந்து ரூபா 195,215,660 தொகையும், மொனராகலை | இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் ஆரம்பத்தில் பிராந்திய செயலக மட்டத்தில் அதிகாரிகள் ஆட்சேர்ப்பு இடம்பெற்றதுடன், ஆட்சேர்ப்பின் போது சமர்ப்பிக்கப்பட்ட கல்விச் சான்றிதழ்களை சரிபார்ப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக போலி சான்றிதழ்களை கொண்ட உத்தியோகத்தர்களை இனங்காணுவதில் தாமதம் ஏற்படடிருந்தது. அவர்கள் 2022 ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்ட போதிலும் அப்போது உத்தியோகத்தர்கள் பலர் ஓய்வுபெறும் வயதை அடைந்தமை மற்றும் அவர்கள் நீண்டகாலமாக அதிகாரசபை மற்றும் திணைக்களத்தின் கீழ் பணியாற்றியவர்கள் என்பதாலும் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதாகவும் மற்றும் போலி சான்றிதழ்களை சமர்ப்பித்த அதிகாரிகள் சங்கமொன்றின் மூலம், அமைச்சின் செயலாளருக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, அவர்கா் தொடர்பாக அனுதாபத்துடன் பரிசீலித்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிக் கோவையின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்டத்தில் 04 பிரதேச செயலகங்களில் 04 உத்தியோகத்தர் களுக்காக 1999 ஆம் ஆண்டு முதல் ரூபா 40,383,176 தொகையும், கொழும்பு மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 17 உத்தியோகத்தர்களுக்காக 2023 ஆம் ஆண்டிற்கு உரியதாக மாத்திரம் ரூபா 8,732,204 தொகையும் சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினால் இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த ஆலோசனை மற்றும் பரிந்துரைகள் மேலதிக ஆலோசனை மற்றும் அங்கீகாரத்திற்காக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அந்த ஆலோசனை மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக. | |
| (ஆ) | வங்கி பதவியணியினரில் 9894 உத்தியோகத்தர்களுக்காக திணைக்கள செலவின விடயத்தில் சம்பளம் செலுத்தப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 853 மில்லியன் ஆகும். சமூக அடிப்படை வங்கிகள் மற்றும் சங்கங்களால் சம்பள செலவினத்திற்காக வருடாந்தம் இலாபத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வங்கி ஆரம்பத்திலிருந்து 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 43.4 பில்லியன் தொகை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய சம்பளமாக ஒதுக்கப்பட்டிருந்த போதும் இதுவரை அந்தப் பணத்தை மீண்டும் அரசாங்கத்திற்கு செலுத்துதல் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக சமுர்த்தி திணைக்களத் திற்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களில் சமூக அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கி சங்கங்களை ஸ்தாபிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | வங்கி பதவியணியினருக்கு வழங்கப்படும் ரூபா 43.4 பில்லியன் சம்பளம் தொடர்பாக வங்கி நிர்வாகக் குழுவிற்கு விடயத்தை சமர்ப்பித்து, அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | திணைக்கள செலவு விடயங்களிலிருந்து வங்கி பதவியணியினருக்கு வழங்கப்படும் சம்பளம் மீண்டும் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன் திணைக்களத்திற்குச் சொந்தமான நிலம்/ கட்டிடங்கள் உரிய சட்ட விதிகளின் பிரகாரம் குத்தகைக்கு விடப்பட அல்லது கையளிக்கப்பட வேண்டும். |